சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 27.03.2026 SC. 17/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிலைமணி | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | கரும்பன் | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW15 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் காவல்துறையில் ஆய்வாளராக பணியாற்றி 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் பணி ஓய்வு பெவற்றேன். தற்போது ராமநாதபுரத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கம்பம் வடக்கு காவல் ஆய்வாளராக பணியாற்றும்போது 04.05.2020ம் தேதி 15.30 மணிக்கு கம்பம் சுப்பிரமணி கோவில் தெரு தங்கராஜ் மகன் கல்யாண்குமார் என்பவர் நிலையத்தில் ஆஜர் ஆகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய பொறுப்பு சார்பு ஆய்வாளர் திவான் மைதீன் அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினம் 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரஞ்சித்குமார், சின்னமாயன், முன்பு சம்பவ இடத்தை பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.12, பின்பு சாட்சிகள் கல்யாண்குமார், கலாவதி, பெருமாள், ரஞ்சித்குமார், சின்னமாயன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 18.15 மணிக்கு வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான மாயாண்டி, பொன்னையா ஆகியோர்களை கைது செய்வதற்கான காரணங்களை கூறி கைது செய்தேன். அப்போது எதிரி மாயாண்டி என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சாட்சிகள் கதிரவன், உதயகுமார் ஆகியோர்க்ள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்பு 19.00 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் இடுப்பில் இருந்து எடுதது ஆஜர் செய்த கத்தியை அத்தாட்சி மூலம் சாட்சிகள் கதிரவன், உதயகுமார் முன்பு கைபற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்ட்ட பகுதி அ.சா.ஆ.13 அத்தாட்சி அ.சா.ஆ.14 ஆகும். எதிரியை கைது செய்து அவரை திரேக பரிசோதனை செய்து தக்க வழிநடை மூலம் உத்தமபாளயைம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்தை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அது அ.சா.ஆ.15 ஆகும். பின்பு வழக்கு சம்பந்தமாக சாட்சிகள் பார்த்தசாரதி, கண்ணன், பாண்டி, சார்பு ஆய்வாளர்

திவான் மைதீன், தங்கராஜ், ரவி, பிரியா, ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.06.2020 ம் தேதி வழககில் கைபற்றபட்ட சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இவ்வழக்கின் 2 ம் எதிரி சௌந்தர் என்ற சௌந்தரபாண்டியன் மாவட்ட நீதிமன்றத்மதில் முன்ஜாமின் பெற்றிருந்ததால் அவரை கைது செய்யவில்லை. பின்பு வழக்கு சம்பந்தமாக டாக்டர். உமா மகேஷ்வரி, டாக்டர். பீரித்தி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். பின்பு வழக்கு சம்பந்தமாக வழக்கின் சட்டபிரிவை 294(b), 323, 307, இ.த.ச. பிரிவில் இருந்து 294(b), 323, 326, 307 இ.த.ச.பிரிவின் படி சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அது அ.சா.ஆ.16 ஆகும். 14.07.2020 ம் தேதி இவ்வழக்கில் பிரிவு 294(b), 323, 326,307 இ.த.ச.பிரிவின் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கை காலம் 15 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பட்ட நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 06.05.2020 ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதாக நீதிமன்ற முத்திரை உள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலில் ஒருநபர் தங்கராஜை தாக்கியதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த ஆயுதம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. கூர்மையான பொருள் என சொல்லப்பட்டுள்ளது. அ.சா.1 கல்யாண்குமார் தான் மருத்துவமனையில் தங்கராஜை சேர்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் 3 நபர்கள் தாக்கினார்கள் என்றால் சரிதான். முதலில் கம்பம் அரசு மருத்துவமனையில் மதியம் 2.50 மணிக்கு அனுமதிக்கப்பட்டு, அதற்கு பின்னர் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலில் ஒரு நபர் தாக்கியதாக உள்ள நிலையில் புகாரில் 3 நபர்கள் தாக்கியதாக உள்ள நிலையில் அந்த முரண்பாடுகள் குறித்து எனது புலன் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சிய விசாரணையில் நேரடி சாட்சிகள் 3 நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொன்னார்கள். நான் என் கைப்பட ஒப்புதல் வாக்குமூலம், மற்றும் அத்தாட்சியை எழுதவில்லை என்றால் சரிதான். என் உத்தரவின் பெயரில் என்னுடன் இருந்த காவலர்கள் எழுதினார்கள். அவர்களை நான் சாட்சிகளாக விசாரிக்க தேவையில்லை. அவர்கள் கண்டிப்பாக விசாரிக்கவேண்டும் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.14 ல் கத்தி வாரச்சந்தை அருகில் வைத்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. எந்த இடம் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாரச்சந்தைக்கு அருகில் என்பது சரியான

இடம் தான். பொதுவாக எதிரியை கைது செய்து சான்று பொருளை கைப்பற்றும்போது எந்த் இடத்தில் கைப்பற்றப்பட்டது என்ற இடத்தை குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்றால் சரிதான். நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். கத்தியை இடுப்பில் இருந்து எடுத்து கொடுத்தாக அத்தாட்சியில் சொல்லவில்லை. எடுத்துக்கொடுத்தாக சொல்லியுள்ளேன். கத்தி எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்பதை நிரூபணம் செய்ய கைரேகை நிபுணருக்கு அனுப்பினேனா என்றால் அவ்வாறு அனுப்ப தேவையில்லை. 2 நேரடி சாட்சிகள் மூலம் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளேன். கத்தியில் இரத்தம் உள்ளதா என்பதை பார்வையிடவில்லை. நான் எதிரியிடமிருந்தது ச.பொ.1 கத்தியை கைபற்றவில்லை என்றும், கைபற்றியிருந்தால் நான் வல்லுநர் ஆய்வுக்கு அனுப்பியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் கைபற்றிய கத்தி இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாது என்றும், நானாக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. சாட்சி கதிரவன், உதயகுமார், ஆகியோர்கள் புகார் தாரர்களுக்கு உறவினர் என்றால் சரியல்ல. நான் மேற்படி கதிரவன் , உதயகுமார் முன்பு எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எதிரி சொல்லவில்லை என்றும், நான் அ.சா.4, அ.சா.6 ஆகியோர்களிடம் கையப்பம் மட்டும் வாங்கிக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்கள் சம்பவம் மதியம் 2 மணிக்கு நடந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. எனது விசாரணையில் 2.30 மணி என்று தான் கூறினார்கள். பார்வை மகஜர், மற்றும் வரைபடத்தில் கட்டிடம் இருந்தாக சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் அ.சா.2 க்குரிய நிலம் என சொல்லியுள்ளேன். தங்கராஜிடம் சொத்து அவருக்கு உரிமைப்பட்டது என காட்ட ஆவணம் எதுவும் வாங்கவில்லை. ஆனால் நேரடி சாட்சிகள் அவரது நிலம் என்று தான் சொன்னார்கள். விபத்து பதிவேட்டில் சம்பவம் வீட்டில் நடந்தாக தான் அ.சா.2 சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவர் புதிதாக கட்டிவந்த வீட்டிற்கு முன்பு தான் சம்பவம் நடைபெற்றது என என் விசாரணையில் தெரியவந்துள்ளது. சாட்சி அ.சா.1, 2 சம்பவம் வீட்டுக்குள் நடந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

என்னுடைய விசாரணையில் அ.சா.1 முதல் அ.சா.3, சாட்சிகள் வீட்டுக்குள் சம்பவம் நடைபெற்றதாக தான் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய விசாணையில் 1, 2 எதிரிகள் கடப்பாரையைக் கொண்டு கட்டிடத்தை இடித்ததாக என் விசாரணையில் சொல்லியுள்ளேன். அந்த கடப்பாரையை நான் கைபற்றினேனா என்றால் கைபற்றவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் என் அண்ணன் கடப்பாரையை எடுத்துவந்து தங்கராஜ் கட்டிய

வீட்டை இடித்துள்ளார் என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் இடிக்கப்பட்டதாக சொல்லப்படும் கட்டிட பொருட்களை இந்த வழக்கில் ஆஜர் படுத்தவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட கத்தி 1ம் எதிரி தனக்கு மட்டும் தெரிந்தே வைத்திருந்தார் என்பதை என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தங்கராஜ் சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் அவர் அணிந்திருந்தத இரத்தம் பட்ட ஆடையை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவில்லை என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்னநேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், நடைெப்றறிருந்தால் இரத்தம்பட்டிருந்த ஆடையை கைப்பற்றிருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் எதிரிகளுக்கும், அ.சா.2 க்கும் நிலப்பிரச்சனை இருந்தது தெரியவந்தது. அந்த நிலப்பிரச்சனை சம்பந்தமகா முன்விரோதம் இருந்து வந்த நிலையில் அ.சா.2 எங்கேயோ விழுந்து அவருக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனவே நான் சரி வர விசாரணை செய்யாமல் ஒரு தலை பட்சமாக குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 முதல் அ.சா.3 கொலை முயற்சியில் ஈடுபட்டார்கள் குறித்து எந்த வாசகமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரில்ல. சம்பவம் நடந்தாக சொல்லும் நேரத்தில் அ.சா1 முதல் அ.சா.3 சாட்சிகளை தவிரவேறு சாட்சிகள் இல்லை என்றால் சரியல்ல. நேரடி சாட்சி பெருமாள் இருந்தார். அது விசாரணையில் தெரியவந்தது. அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ள சாட்சிகள் சம்பவத்தை நேரில் பார்த்த பெருமாள் இருந்தார் என சொன்னார்கள் என்றால் சொல்லவில்லை. புகாரிலும் அதை பற்றி சொல்லவில்லை. நான் சொல்வது போல் சொன்னநேரத்தில், சொன்னஇடத்தில் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் மீது ஒருதலைபட்சமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம்த கொடுக்கவில்லலை என்றும், அவரிடம் இருந்து எந்த ச.பொ கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH Date: 2026.03.27 17:43:52 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்